*DEPOSITION OF WITNESS*
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT*
*Mannargudi*
*CC.No. 287/2010 – P.W. 5 (LW-8)*

| | |
|---|---|
| *Name* | அசோக்குமார் (காவல் ஆய்வாளர் ஓய்வு) |
| *Father/Husband's Name* | ரெங்கசாமி |
| *Village* | சேலம் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 65 |

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 15.04.2026*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் கடந்த 31.03.2017 ம் ஆண்டு நாமக்கல் மாவட்டம், பள்ளிப்பாளையம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது சேலத்தில் வசித்து வருகிறேன். கடந்த 2010-ம் ஆண்டு நான் பரவாக்கோட்டை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது கடந்த 10.12.2009-ம் தேதியன்று D1/466/DCRB/09 என்ற நடப்பு தாளை திருவாரூர் மாவட்ட குற்றப்பிரிவிலிருந்து எங்கள் காவல் நிலையத்திற்கு பார்வையிட்டு விசாரித்து அறிக்கை அனுப்புமாறு எங்கள் காவல் நிலையத்திற்கு அனுப்பி வைத்திருந்தார்கள்.

2. மேற்படி நடப்பு தாளை நான் பார்வையிட்ட போது, ராஜதுரை என்பவர் பாஸ்போர்ட் எடுக்கும்போது கொடுத்த ஆவணங்களை சரிபார்த்து அறிக்கை அனுப்புமாறு அதில் குறிப்பிட்டிருந்தது. மேற்படி நடப்பு தாளின் அடிப்படையில் தலைமை காவலர் அழகேந்திரன் என்பவரை திருச்சி பாஸ்போர்ட் அலுவலகம் அனுப்பி மேற்படி எதிரியின் பாஸ்போர்ட் சம்மந்தமான அனைத்து ஆவணங்களை பெற்று வந்தார். மேலும் கடந்த 15.02.2010-ம் தேதியன்று முதல் நிலை காவலர் சிவஞானம் என்பவர் எதிரி ராஜதுரை பாஸ்போர்ட் எடுக்கும்போது பயன்படுத்திய பள்ளி சான்றிதழை சரிபார்ப்பதற்காக ஆலங்கோட்டை அரசு மேல்நிலைப்பள்ளிக்கு சென்று எதிரி ராஜதுரை பள்ளிசான்றிதழ் பற்றி தலைமை ஆசிரியரிடம்

விசாரித்தபோது, தலைமை ஆசிரியர் மேற்படி நபர் இங்கு படிக்கவில்லை என்றும், பள்ளி மாற்று சான்றிதழ் இங்கு வழங்கவில்லை என்று தலைமை ஆசிரியர் சுப்ரமணியன் என்பவர் சான்று வழங்கியுள்ளார். **(தலைமை ஆசிரியர் வழங்கிய உண்மைதன்மை சான்று அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**3.** பின்னர் மேற்படி உண்மை சான்றின் அடிப்படையில் கடந்த 16.02.2010-ம் தேதியன்று எதிரிகள் மீது பரவாக்கோட்டை நிலைய குற்ற எண்.23/2010, ச/பி. 12(1)(b) பாஸ்போர்ட் ஆக்ட் உ/இ 420,468,471 இ.த.ச-வின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 3 வரையிலானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும், அன்றையதினமே எதிரிகள் இருவருக்கும் அழைப்பாணை அனுப்பி அதனடிப்படையில் நிலையம் வந்த எதிரிகளை விசாரித்தபோது, குற்றத்தை ஒப்புக்கொண்ட நபர்களை குற்றக்காரணம் கூறி கைது செய்தேன்.

4. பின்னர் எதிரி ராஜதுரை என்பவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் இளையராஜா மற்றும் செந்தில் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்து, அதில் மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கடந்த 2008-ம் ஆண்டு எதிரி ராஜதுரை சிங்கப்பூருக்கு செல்லவேண்டி பாஸ்போர்ட் எடுக்க கூப்பாச்சிக்கோட்டையிலுள்ள இந்திரஜித் என்பவரை அணுகி அவருக்கு பள்ளி சான்றிதழ் இல்லை என்று கூறியுள்ளார். அதை எதிரி இந்திரஜித் என்பவர் தான் பார்த்துக்கொள்கிறேன் என்று எதிரி ராஜதுரையிடமிருந்து ரூ.3000/- பணம் பெற்றுள்ளார். பின்னர் சிறிது நாள் கழித்து ரூ.1000/- பெற்றார் என்றும், நான் பள்ளி சான்றிதழை தயார் செய்து தருகிறேன் என்று கூறியுள்ளார்.

5. மேலும், இந்திரஜித் என்பவர் தனக்கு தெரிந்த நபர் திருச்சியில் இருப்பதாகவும், அவர் பள்ளிச்சான்றிதழை போலியாக தயார் செய்து கொடுத்து விடுவார் என்று கூறியதை நான் ஒப்புதல் வாக்குமூலத்தில் பதிவு செய்தேன். **(எதிரி ராஜதுரை கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** அதே போல் எதிரி இந்திரஜித் என்பவரும் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள்

ராஜா மற்றும் ராஜேந்திரன் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்துக்கொண்டு அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன்.

6. எதிரி இந்திரஜித்தினுடைய ஒப்புதல் வாக்குமூலத்திலும், எதிரி ராஜதுரை கூறிய அதே சங்கதிகளை ஒத்துரைத்து கூறியதை நான் பதிவு செய்துக்கொண்டேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி இந்திரஜித் என்பவர் அவருக்கு தெரிந்த திருச்சியிலிருந்த ஒரு நபரிடமிருந்து தான் போலியான பள்ளி சான்றிதழை பெற்றேன் என்று அவரது ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறியுள்ளார். அந்த திருச்சிலியிருந்த நபரினுடைய பெயர், விலாசம் எதுவும் தெரியவில்லை என்று வாக்குமூலம் அளித்துள்ளார். **(எதிரி இந்திரஜித் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**7.** பின்னர் எதிரி ராஜதுரையிடமிருந்து பரவாக்கோட்டை அரசினர் மேல் நிலைப்பள்ளியில் மாற்று சான்றிதழ் கிழிந்த நிலையில் இருந்ததை சாட்சிகள் இளையராஜா மற்றும் செந்தில்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். **(கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மேலும் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரையிலான சாட்சிகளை விசாரணை செய்த வகையில் எதிரி ராஜதுரை என்பவர் பரவாக்கோட்டை மேல்நிலைப்பள்ளியில் படித்தார் என்றும், ஆலங்கோட்டை அரசு மேல் நிலைப்பள்ளியில் அவர் படிக்கவில்லை என்று எனது விசாரணையில் தெரியவந்தது. மேலும், 2 எதிரிகளும் கூட்டாக சேர்ந்து போலியான பள்ளிமாற்று சான்றிதழை தயார் செய்து பாஸ்போர்ட் பெற்றுள்ளார் என்ற விவரத்தினை எனது விசாரணையில் நான் தெரிந்துக்கொண்டேன்.

8. பின்னர் எதிரிகள் இருவரையும் மற்றும் கைப்பற்றப்பட்ட தடயப்பொருட்கைள சமூகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்து எதிரிகளை நீதிமன்ற அடைப்பு காவலுக்கு உட்படுத்தினேன். மேலும், கைப்பற்றப்பட்ட தடயப்பொருட்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்து, அது நீதிமன்ற வழக்கு சொத்து 24/2010- ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டது.**(படிவம் 91 அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

9. இத்துடன் எனது புலன்விசாரணை முடித்து எதிரிகளின் செய்கையானது 12(1) (b) பாஸ்போர்ட் ஆக்ட் உ/இ 420,468,471 இ.த.ச. வின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. குற்ற வழக்கு தொடர்பாக புகார் என்பது கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கு தொடர்பாக மாவட்ட குற்றபிரிவிலிருந்து கடிதம் வரப்பெற்றது என்றால் சரிதான். மாவட்ட குற்ற பிரிவிற்கு யாரால் புகார் கொடுக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் பாஸ்போர்ட அலுவலகத்திலிருந்து குற்ற பிரிவுற்கு புகார் அனுப்பப்பட்டது தெரியும். ஆனால் யாரால் புகார் கொடுக்கப்பட்டது என்பது பற்றி குறிப்பிட்டு எனக்கு தெரியாது. மாவட்ட குற்றப்பிரிவிலிருந்து எதிரி ராஜதுரையின் பாஸ்போர்ட் தொடர்பான ஆவணங்களை சரிபார்பார்ப்பு செய்து அறிக்கை அனுப்புமாறு தான் குறிப்பிட்டு இருந்தது என்றால் சரிதான்.

2. மாவட்ட குற்றப்பிரிவிலிருந்து அறிக்கை கேட்டார்கள். நான் அறிக்கை அனுப்பினேன் என்றால் சரிதான். எதிரி மீது நடவடிக்கையும் எடுத்தேன். ஆனால் என்னை நடவடிக்கை எடுக்கும்படி அவர்கள் பரிந்துரை செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் நான் நடப்பு தாளின்படி நடவடிக்கை எடுத்தேன். நடப்பு தாளை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பரவாக்கோட்டை பள்ளி தலைமை ஆசிரியரை விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். ஆனால் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. அவ்வாறு நான் உண்மையில் விசாரித்திருந்தால் நான் அவரையும் சாட்சி பட்டியலில் சேர்த்திருப்பேன் என்றால் சரியல்ல.

3. ஒப்புதல் வாக்குமூலம் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றால் சரிதான். நான் முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்தில் அனுப்பும்போது புகாரோ அல்லது மாவட்ட குற்றப்பிரிவு காவல் துறையிலிருந்து பெறப்பட்ட நடப்பு தாளை முதல் தகவல் அறிக்கையுடன் சேர்த்து அனுப்பவேண்டும் என்பது நடைமுறை என்றால் சரிதான். நான் இந்த வழக்கின் நடைமுறையை உரிய அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தேன். நான் நீதிமன்ற நடைமுறை சரியாக பின்பற்றவில்லை என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கினை சரிவர விசாரணை செய்யாமல் குற்ற வழக்கு தொடர்புடைய நடைமுறைகளை நான் சரிவர

பின்பற்றவில்லை என்றால் சரியல்ல. நடப்பு தாள் வந்ததன் அடிப்படையில் எவ்வித விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது  பொய்யான வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.  எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 15.04.2026

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.